# கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை.

## இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டிற்கான பொதுக் கலைமாணித் தேர்வு - 2014/2015 (September/October - 2018)

## ED/S - 2213 நிறுவன நடத்தையும், பயன்தருபாடசாலை முகாமைத்துவமும் (Organizational Behavior and Effective School Management)

நேரம் - 03 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து இரு (02) வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து மூன்று வினாக்களுக்கும் மொத்தமாக ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி I

01. அ. "பாடசாலை ஒரு நிறுவனமாகும்" எனும் கருப்பொருளினை பாடசாலையின் கட்டமைப்பு முறைகளைக்கொண்டு தெளிவுபடுத்துக? (04 புள்ளிகள்)

ஆ. "அபிவிருத்தியை மையமாகக்கொண்ட நிறுவனங்களின் மீது சூழற்காரணிகளின் தாக்கம் தொடர்ந்து இடம்பெற்றுக்கொண்டிருப்பதில் சந்தேகமில்லை" அவ்வபிவிருத்தியில் நாட்டின் பொருளாதார நிலைமை, அரசியற்காரணிகள், தொழிநுட்பக்காரணிகள் என்பன எவ்வகையில் தாக்கம் செலுத்துகின்றதென்பதனை தெளிவுபடுத்துக? (10 புள்ளிகள்)

02. அ. "முகாமைத்துவமானது பாரம்பரிய நிறுவனக்கோட்பாடுகளில் இருந்து விலகி விஞ்ஞானரீதியான செயற்பாடுகளில் பாரிய வளர்ச்சிகண்டுள்ளது". இவை இரண்டிற்குமிடையில் உள்ள வேறுபாட்டினை சுருக்கமாக விளக்குக? (04 புள்ளிகள்)

ஆ. பாடசாலை அதிபர் ஒருவர் நிறுவனத்தின் முகாமைத்துவம் பற்றி பூரணமாக விளங்கிக்கொண்டாலும் அம்முகாமைத்துவ விதிமுறைகளை எல்லாக்கட்டங்களிலும் பயன்படுத்துவது சாத்தியப்படுமா என்பதனை அதிபர் ஒரு சிறந்த தலைவர் எனக்கொண்டு விமர்சனரீதியாக ஆராய்க? (10 புள்ளிகள்)

03. அ. "ஒரு நிறுவனத்தின் நடத்தை என்பதால் நீர் விளங்கிக்கொள்வது யாதென்பதனை E.F.L பிரெச் கூறிய கருத்தோடு தொடர்புபடுத்தி சுருக்கமாக விளக்குக? (04 புள்ளிகள்)

ஆ. "அரச நிறுவனங்களைவிட அரச சார்பற்ற நிறுவனங்கள் அதிக வினைத்திறன் கொண்ட செயற்பாடுகளை பிரயோகிக்கின்றன" இதற்கான நடைமுறைக் காரணங்கள் (03) மூன்றினைக்கூறி பகுப்பாய்வு செய்க? (10 புள்ளிகள்)

## பகுதி II

04\. அ. "அரசும் சமூகமும் பாடசாலைகள் மீது பல்வேறுவிதமான எதிர்பார்ப்புக்களைக் கொண்டுள்ளன." இதன் அடிப்படையில் பாடசாலைகளில் மாற்றம் ஏற்பட வேண்டிய அவசியத்தினை பாடசாலையில் மாற்றங்களை முகாமை செய்தல் எனும் எண்ணக்கருவின் ஊடாகத் தெளிவு படுத்துக.?

(08 புள்ளிகள்)

ஆ. கடந்த சில தசாப்தங்களில் இருந்து இன்று வரை பாடசாலை நிர்வாகம் அல்லது முகாமைத்துவம் சார்பாக ஏற்பட்ட முக்கிய நான்கு (04) மாற்றங்களைப் பட்டியற்படுத்தி விளக்குக?

(08 புள்ளிகள்)

ஆ. பாடசாலை நிர்வாகத்தில் புதிய மாற்றங்கள் உள்வாங்கப்படும்போது நீர் ஒரு அதிபர் எனும் ரீதியில் எவ்வாறான பங்களிப்புக்களை மேற்கொள்வீர் என்பதற்கான செயற்பாடுகள் நான்கினைக்கூறி (04) விளக்குக?

(08 புள்ளிகள்)

05\. அ. ஆளணிவளங்களின் குறைபாடுகள் பாடசாலை அபிவிருத்தியில் பாரிய தாக்கத்தினை செலுத்தும் ஒரு முக்கிய விடயமாகும். இவ்வளக்குறைபாட்டினை அதிபர் வினைத்திறன் கொண்ட முகாமைத்துவமாக மாற்றி எவ்வகையில் பங்காற்றமுடியும் என்பதனை பகுப்பாய்வு செய்க?

(08 புள்ளிகள்)

ஆ. "கலைத்திட்ட அமுலாக்கத்தினை அதிபர் மேற்கொள்ளும்போது கைக்கொள்ளும் கோட்பாடுகள் தற்கால கவனயீர்ப்பை மையமாகக்கொண்டிருக்கவேண்டும்." இதனை அடிப்படையாகக்கொண்டு கலைத்திட்டமொன்றினை உருவாக்கும்போது அதிபர் ஒருவர் எவ்வாறான செயற்பாடுகளுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்பதனை விமர்சன ரீதியாக ஆராய்க?

(08 புள்ளிகள்)

இ. ஆசிரியர் வாண்மை இலக்குகள் தொடர்பாக ஹவார்ட் பிரிட்லி (Haward bredly) என்பவர் முன்மொழிந்த இலக்குகள் அனைத்தும் இக்கால ஆசிரியர்களின் விருத்தி செயன்முறைகளில் தாக்கம் செலுத்தும் விதங்களினை நடைமுறைக் கல்விச்செயன்முறைகளோடு தொடர்புபடுத்தி ஆராய்க?

(08 புள்ளிகள்)

06\. அ. சிறந்த திட்டமிடலின் நான்கு (04) பண்புகளை மையமாகக்கொண்டு அவற்றினை கல்வித்திட்டமிடல்களை மேற்கொள்ளும்போது எவ்வகையில் பயன்படுத்த முடியும் என்பதனை திட்டமிடலின் முக்கியத்துவத்தினை மையமாகக்கொண்டு ஆராய்க?

(08 புள்ளிகள்)

ஆ. “பாடசாலை மேற்பர்வையில் உள்ள குறைபாடுகளை விளக்கி அதிபர் ஒருவர் மேற்பார்வையை வலுப்படுத்துவதில் எவ்வாறான நவீன உத்திகளைப் பயன்படுத்துவார் என்பதனைத் தொளிவுபடுத்ததுக?

(08 புள்ளிகள்)

இ. “இன்றைய கல்வித்துறை செயற்பாடுகளில் பெற்றோர் தமது பிள்ளைகள் கற்கும் பாடசாலையுடனும், ஆசிரியருடனும் தொடர்புகளைப் பேணுவதன் மூலம் பெற்றோருக்கான கல்வி (Parental Education) வலுப்பெறுகின்றது”. இதனைப் பாடசாலையின் எவ்வாறான செயற்பாடுகளின் ஊடாக நடைமுறைப்படுத்தலாம் என்பதனைப் பட்டியற்படுத்துக?

(08 புள்ளிகள்)

07. கீழ்வருவன தொடர்பான விடைகளை சுருக்கமாகப் பட்டியற்படுத்துக

அ. பாடசாலை நேரசூசிகள் தயாரிக்கும்போது எதிர்நோக்கும் சவால்கள்.

ஆ. பாடசாலையின் கல்வி முகாமைத்துவ தகவல் தொகுதி (EMIS) இன் செயற்பாடுகள்.

இ. பாடசாலை விளைதிறன் பற்றிய எண்ணக்கருவின் தோற்றம். (Effectiveness)

ஈ. பாடசாலை மட்ட முகாமைத்துவம் (SBM) உருவாக்கப்பட்ட நோக்கங்கள்.

உ. உறுதியற்ற தீர்மானங்கள் எடுக்கப்படுவதற்கான காரணங்கள்.

ஊ. பாடசாலை முகாமைத்துவம் சார்பான தற்கால எழுவினாக்கள் (issues)

(6 x 4 = 24 புள்ளிகள்)